## கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2017

கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 3008 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க சாதாரண செயற்பாடுகள் மற்றும் 3009 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க விசேட செயற்பாடுகள் கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.04 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சு, பரீட்சைத் திணைக்களம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் என்பவற்றாலும் மாகாண மட்டத்தில் மாகாண சபைகளாலும் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. இந்த அறிக்கையானது தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சு, பரீட்சைத் திணைக்களம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் என்பவற்றால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான கருத்துரைகளைக் கொண்டுள்ளது.

### 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நாட்டின் பொது கல்வித்துறை எதிர்நோக்குகின்ற சவால்களை முன்வைக்கும் கல்வித்துறை அபிவிருத்தி கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2013–2017 இற்கான நிதி ஆதரவை வழங்குவதற்காக கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்றது. கல்வி அமைச்சு கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்விக்கான சமத்துவமான அணுகுதலை அதிகரித்தல், ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியின் தரத்தை முன்னேற்றுதல் மற்றும் கல்வியின் ஆட்சி மற்றும் சேவை வழங்கலை வலுப்படுத்துதல் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 26,000 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் தொகையாகும். நிகழ்ச்சித்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 ஆகஸ்ட் 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

### 1.3 ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள்

தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தினுடைய ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான கல்வித்துறையின் மூன்று மத்திய நிறுவனங்களிற்கான செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் செயன்முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன கல்வித்துறையின் மூன்று மத்திய நிறுவனங்களின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையானது நிதிப்பிரமாணம் 150 மற்றும் அரச கணக்குகள் திணைக்களத்தின் 2017 ஒக்தோபர் 16 ஆம் திகதிய 258/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையானது ஆசிய அபிவிருத்தி வங்கிக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) வைப்புக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன பொதுத் திறைசேரியால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும்

வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்கான கல்வி அமைச்சு தொடர்பான 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் முதலாம் பட்டோலையின் 126 ஆம் இலக்க தலைப்பின் ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் அரச கணக்குகள் திணைக்களத்தின் 2017 ஒக்தோபர் 16 ஆம் திகதிய 258/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை என்பவற்றின் ஏற்பாடுகளுக்கேற்ப தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேற்படி ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையானது பொதுத் திறைசேரிப் பதிவேடுகள், வருடாந்த மதிப்பீடுகள் மற்றும் கல்வித்துறையின் மூன்று மத்திய நிறுவனங்களால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றுடன் இணங்கியிருந்தன என்றும்,

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது வைப்புக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன பொதுத் திறைசேரியால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(இ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 இன் எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையானது 2018 மே 30 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 ஆம் ஆண்டின் போது | | 2017 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 200 | 26,000 | 4,880 | 26.60 | 2,619.29 | 98.93 | 13,342.81 |
| | 200 | 26,000 | 4,880 | 26.60 | 2,619.29 | 98.93 | 13,342.81 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 26,000 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 21,710 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 167 மில்லியன் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்த திகதியிலிருந்து 04 ஆண்டுகள் கடந்த பின்னர் இலங்கை அரசாங்கத்தால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளளிக்கப்பட்டிருந்தது. மேலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்காக ரூபா 13,342.81 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 98.93 மில்லியன் மாத்திரம் வரிசை அமைச்சால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வரிசை அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம், ரூபா 52,577 மில்லியன் தொகையான ஒதுக்கீடு வரிசை அமைச்சின் மூலதன செலவினத்தை எதிர்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் 47 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 24,954 மில்லியன் தொகை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவிடப்படாதிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்காக ரூபா 4,880 மில்லியன் தொகை ஒதுக்கீடு

செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2,261 மில்லியன் தொகை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவிடப்படாதிருந்தது. மீளாய்வாண்டின் போது தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,700 மில்லியன் தொகையான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டதுடன் அதில் ரூபா 591.84 மில்லியன் மாத்திரம் தொழில்நுட்ப விஞ்ஞானப் பிரிவுகளின் பாடவிதானங்களின் தொடர்ச்சியான மாற்றங்கள் மற்றும் கோரப்பட்ட விலைமனுக்களின் தொடர்ச்சியான நிராகரிப்பு காரணமாக உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.2 பௌதீக முன்னேற்றம்

நிகழ்ச்சித்திட்ட ஆவணங்களின் பிரகாரம், நாட்டின் பொதுக் கல்வித்துறையின் எதிர்கால சவால்களை முன்வைக்கும் கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களை எதிர்கொள்வதற்காக 09 பிரதான பணவளிப்பு இணைப்பு பெறுபேறுகளின் கீழ் இனங்காணப்பட்ட இலக்குகள் அடையப்படுவதற்கு வேண்டப்பட்டிருந்தன. பணவளிப்பு இணைப்பு பெறுபேறுகளின் கீழ் மீளாய்வாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் அடைதல்கள் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், க.பொ.த. (உயர்தரம்) இற்கான தொழில்நுட்ப விஞ்ஞான பிரிவுகளிற்கான வகுப்புக்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 196 தேசிய பாடசாலைகள் உள்ளடங்கலாக 380 பாடசாலைகளில் நடாத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், தொழில்நுட்பவியல் விஞ்ஞான பிரிவுகளிற்கான வகுப்புக்களை நடாத்துவதற்கான ஆசிரியர்கள் போதியளவு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருக்காததுடன் உரிய பிரிவுகளிற்கான 257 ஆசிரியர் வெற்றிடங்கள் அத்திகதியிலுள்ளவாறு நிரப்பப்படாதிருந்தன.

(ஆ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், நாட்டிலுள்ள 259 தேசிய பாடசாலைகளில் பாடசாலை அதிபர் பதவிகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாக இருந்ததுடன் பதிற்கடமை நியமனங்களின் கீழ் ஏனைய உத்தியோகத்தர்களால் கடமைகள் மேவுகை செய்யப்பட்டிருந்தன. பாடசாலை தொகைமதிப்பு அறிக்கை - 2017 இன் பிரகாரம், அனைத்துப் பாடசாலைகளில் 3.5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 353 தேசிய பாடசாலைகள் உள்ளடங்கலாக நாட்டில் 10,194 பாடசாலைகள் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், மாணவ சனத்தொகையின் 19.50 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 811,164 மாணவர்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய பாடசாலைகளில் சமூகமளித்திருந்த அதேநேரம் ஆசிரிய சனத்தொகையின் 15.80 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 38,242 ஆசிரியர்கள் தேசிய பாடசாலைகளிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

(இ) நிகழ்ச்சித்திட்ட ஆவணங்களின் பிரகாரம், பாடசாலைகளில் 250 தொழில்நுட்பவியல் பீடங்களிற்கான கட்டிடங்கள் நாடளாவிய ரீதியில் நிர்மாணிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் அதில் 246 கட்டிடங்களின் நிர்மாண வேலைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. கொழும்பு - 10 இலுள்ள கொத்மி பெண்கள் பாடசாலை மற்றும் கொழும்பு - 15 இலுள்ள ஆனந்த விதிதியாசாலை என்பவற்றின் நிர்மாண வேலைகள் உரிய பாடசாலைகளில் இடவசதிகள் பற்றாக்குறை காரணமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கண்டியிலுள்ள அனுருத்த குமார தேசிய பாடசாலை மற்றும் ஹோல்புறூக் தமிழ் வித்தியாசாலை என்பவற்றின் கட்டிட நிர்மாண வேலைகள் ஒப்பந்தகாரர்களின் தவறுகள் காரணமாக அரைவாசியில் கைவிடப்பட்டிருந்தன.